**செய்தி வெளியீடு எண்: 154** **நாள்: 22.02.2019**

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு, அரசு அளித்த வட்டி தள்ளுபடி சலுகையினை மேலும் 31.03.2020 வரை காலத்திற்கு நீட்டிக்கப்பட்டது தொடர்பான வரைவு பத்திரிக்கை செய்தி

வட்டி சுமையின் காரணமாக, விற்பனைப் பத்திரம் பெறாமல் இருந்த, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு, மாதாந்திர தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி மற்றும் முதலாக்கத்தின் மீதான வட்டியினை முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை வருடத்திற்கு ஐந்து மாதம் மட்டும் கணக்கிட்டு தள்ளுபடி செய்து, அரசு கடந்த **15.06.2017** அன்று ஆணை வழங்கியது. அரசின் இச்சலுகையினை ஒருவருட காலத்திற்கு அதாவது **26.08.2018** வரை நடைமுறைப்படுத்த நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது, பின்னர் அரசின் இச்சலுகையினை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் மூலம் பல்வேறு திட்டங்களில் ஒதுக்கீடுதாரர்கள் வட்டி தள்ளுபடி நீங்கலாக, முழுத் தொகையையும் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற்று பயனடைந்து வருகின்றனர். இச்சலுகை, எதிர்வரும் **26.02.2019** அன்றுடன் முடிவடைய உள்ளதால், வட்டி தள்ளுபடி சலுகை மேலும் **31.03.2020** வரையிலான காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, வட்டி சுமையினால் விற்பனைப் பத்திரம் பெற்றிடாத ஒதுக்கீடுதாரர்கள், உடனடியாக சம்மந்தப்பட்ட கோட்டம் / பிரிவு அலுவலகங்களை அணுகி, வட்டி தள்ளுபடி நீங்கலாக, நிலுவைத் தொகையினை உடன் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற, இப்பொன்னான வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**